# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029161

1. District மாவட்டம் : திருப்பூர் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 1/2018 Date: நாள் 13.1.2018

2. (i) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 102

(ii) Act சட்டம்: P.C. Act 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.1.2018 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.10 மணிக்கு முன்பு Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.01.2018 Time : நேரம் 01.00hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. VOL - I Time : நேரம் 01.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1 Km. தெற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகம் குமார் நகர், திருப்பூர்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.N. பிரபாகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P.N. நாகராஜன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53/18 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோவை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. L. சுப்பிரமணி, மாவட்ட தீயணைப்பு அலுவலர், திருப்பூர் மாவட்டம், திருப்பூர்.
2. K. சக்திவேல், நிலைய தீயணைப்பு அலுவலர், திருப்பூர் வடக்கு, திருப்பூர்.
3. K. புவனேஸ்வரி, அலுவலக உதவியாளர், மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகம், திருப்பூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப் படுகிறது.

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
13-01-2018

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. ராஜேந்திரன்
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
கு.த.க. பிரிவு,
திருப்பூர்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**திருப்பூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2018/AC/TPR பிரிவு 102 கு.வி.மு.ச மற்றும் 13(2) r/w 13(1)(d) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்.**

இன்று 13.01.2018-ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் திருப்பூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் அலுவலில் இருந்த போது திரு.P.N.பிரபாகரன், ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோவை மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2018/AC/TPR பிரிவு 102 கு.வி.மு.ச மற்றும் 13(2) r/w 13(1)(d) ஊழல் தடுப்புச் சட்டம் 1988-ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.P.N.பிரபாகரன், ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோவை மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,திருப்பூர். ந.க.எண்.10/2018-I-1 நாள்.12.1.2018 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – திருப்பூர் மாவட்டம் - மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகம் 12.01.2018 அன்று திடீர் தணிக்கை செய்யப்பட்டது - நடவடிக்கை எடுத்தல் - தொடர்பாக. திருப்பூர் மாவட்டம் மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகத்திற்கு தீ தடையின்மைச் சான்று, தீ உரிமம் பெறுதல், தீ உரிமம் புதுப்பித்தலுக்கு வரும் பொதுமக்களிடம் கையூட்டு பெறுவதாக வரப்பெற்ற தகவலின் பேரில் இன்று 12.01.2018-ன் தேதி 19.10 மணிக்கு திருப்பூர் மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் நடவடிக்கை தொடர்பான நடவடிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. திடீர் தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூ.47,000/- (ரூபாய் நாற்பத்தியேழாயிரம் மட்டும்) விசாரணைக்காகவும், மேல்நடவடிக்கைக்காகவும் கைப்பற்றப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. மேலும் தொடர்புடைய ஆவணங்களின் நகல்கள் விசாரணைக்காக பெறப்பட்டது. அதன்படி விசாரணை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஒப்பம்...ஆய்வுக்குழு அலுவலர்,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோவை மாவட்டம். நடவடிக்கையின் விபரம் பின்வருமாறு. கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

ந.க.எண்.10/2018/ I-1 நாள் 12.01.2018.முன்னிலை : 1) திரு.P.N.பிரபாகரன், ஆய்வுக்குழு அலுவலர்,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோவை மாவட்டம்.2) திரு.N.ரவிச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். 3) திருமதி.R.கௌசல்யா,காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். 4) திருமதி.G.வெங்கடேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,திருப்பூர். 5) திரு.L.சுப்பிரமணி, மாவட்ட அலுவலர், தீயணைப்பு-மீட்பு பணிகள், திருப்பூர் மாவட்டம். இன்று 12.01.2018-ம் தேதி பிற்பகல் திருப்பூர் மாவட்டம், மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகத்தில் பணிபுரியும் மாவட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தீ தடையின்மைச் சான்று, தீ உரிமம் வழங்குதல், தீ உரிமம் புதுப்பித்தல் ஆகியவற்றிற்காக வரும் பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப் பெற்ற நம்பகமான தகவலின் பேரில் இன்று மாலை 19.10 மணிக்கு மேற்படி அலுவலகத்தை நான் மற்றும் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர்கள் மற்றும் போலீசாருடன் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் போது அலுவலகத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியில் இருந்தார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.L.சுப்பிரமணி | - | மாவட்ட தீயணைப்பு அலுவலர் |
| 2. | திரு.K.சக்திவேல் | - | நிலைய தீயணைப்பு அலுவலர், திருப்பூர் வடக்கு |
| 3. | திரு.A.சண்முகம் | - | நிலைய தீயணைப்பு அலுவலர்,(தீ தடுப்புக் குழு) |
| 4. | திருமதி M.சாந்தி | - | கண்காணிப்பாளர் |
| 5. | திருமதி R.லதா | - | உதவியாளர் |
| 6. | திருமதி.K.புவனேஸ்வரி | - | அலுவலக உதவியாளர் |
| 7. | திரு.K.மணிகண்டன் | - | தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீ அணைப்பாளர் UGLF 6033 |
| 8. | திரு.D.தாமோதரசாமி | - | தீ அணைப்பாளர் F.M.8205 |
| 9. | திரு.A.சந்தோஷ்குமார் | - | தீ அணைப்போர் ஓட்டி FMD 9330 |
| 10. | திரு.S.கொடிசேகர் | - | தீ அணைப்பாளர் F.M. 7300 |
| 11. | திரு.A.லிங்கஜோதிநாதன் | - | தீ அணைப்பாளர் F.M. 9233 |

ஆகியோர்கள் மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்தார்கள். திருப்பூர் மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகமானது தென்வடலாக செல்லும் திருப்பூர் to அவிநாசி ரோடு குமார்

நகரில் ரோட்டின் மேற்கே கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்த போது மாவட்ட தீயணைப்பு அலுவலர், திருப்பூர் வடக்கு நிலைய தீயணைப்பு அலுவலரிடம் அவரது அறையில் பேசிக் கொண்டிருந்தார். நிலைய தீயணைப்பு அலுவலர் (தீ தடுப்புக் குழு), அலுவலக பணியாளர்கள் மற்றும் தீ அணைப்பாளர்கள் அவர்களது பணிகளை கவனித்துக் கொண்டிருந்தார்கள். மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் ஆய்வுக்குழு அலுவலர் தன்னையும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களையும் அறிமுகப்படுத்திக் கொண்டு திடீர் தணிக்கை விபரம் பற்றி தெரிவிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் போது மாவட்ட தீயணைப்பு அலுவலர் அவரது இருக்கையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்தார். அவரைப் பற்றி விசாரிக்க தனது பெயர் L.சுப்பிரமணி என்றும் தான் திருப்பூர் மாவட்ட தீயணைப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட தீயணைப்பாளராக கடந்த 07.11.2017-ம் தேதி முதல் பணி செய்து வருவதாக தெரிவித்தார். அவரிடமிருக்கும் பணம் பற்றிக் கேட்க அவர் தனது பேண்டின் பின்புற பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.6,000/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைப் பற்றி கேட்க மௌனமாக இருந்து பதில் ஏதும் கூறாத காரணத்தினால் அந்தப் பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. அவரது இருக்கையின் இடது புறம் வடகிழக்கில் இருந்த அலமாரியின் மூன்றாவது அடுக்கில் எமர்ஜென்சி லைட் என எழுதப்பட்ட அட்டைப்பெட்டியில் இருந்த தெர்மாகோலுக்கு அடியில் ரூ.2,000/- மற்றும் ரூ.500/- நோட்டுக்கள் கட்டாக இருந்தது. அந்தப் பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.25,000/- இருந்தது. அந்தப் பணத்தைப் பற்றி மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் கேட்க அந்த பணம் தனது அறையில் எப்படி வந்தது என்று தெரியாது என்று கூறினார். அந்தப் பணம் விசாரணையின் பொருட்டு என்னால் கைப்பற்றப்பட்டது. அவரது அறையில் அவரிடம் பேசிக் கொண்டிருந்த நபரிடம் விசாரிக்க தனது பெயர் K.சக்திவேல் என்றும் தான் நிலைய தீயணைப்பு அலுவலராக திருப்பூர் வடக்கு அலுவலகத்தில் பணிபுரிவதாகவும் தான் தனது அலுவலகத்தில் இருந்து தடையின்மைச் சான்று கோரிய விண்ணப்பங்களுக்கான ஆய்வறிக்கையை அலுவலகத்தில் கொடுத்து விட்டு அது தொடர்பாக மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் பேசிக் கொண்டிருந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றிக் கேட்க தனது பேண்டின் வலது பக்க பின்புறமிருந்து கருப்பு நிற மணிபர்சில் இருந்த ரூ.4,122/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க

ரூ.122/- தனது சொந்தப் பணம் என்று கூறியதால் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள ரூ.4,000/- பற்றிக் கேட்க அதைப் பற்றி எதுவும் கூறவில்லை. எனவே அந்தப் பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. அலுவலக அறையில் B1 இருக்கையின் எதிரே அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க தனது பெயர் சண்முகம் என்றும் தான் திருப்பூர் தீ தடுப்பு குழுவில் நிலைய தீயணைப்பு அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேற்படி நபரிடம் பணம் பற்றிக் கேட்க ரூ.20/-ஐ எடுத்து ஆஜர். மேற்படி பணத்தைப் பற்றி விசாரிக்க அது அவரது சொந்தப்பணம் என்று கூறியதால் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. தெற்கு நோக்கியவாறு அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க தான் தனது பெயர் சாந்தி என்றும் மேற்படி அலுவலகத்தில் கடந்த 2011-ம் வருடம் முதல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் ஏதேனும் பணம் உள்ளதா என்று விசாரிக்க அவர் தனது பிரவுன் கலர் கைப்பையின் உள்ளறையில் இருந்து ரூ.580/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் பற்றி விசாரிக்க அது தனது சொந்தப்பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலுவலக அறையில் கிழக்கு நோக்கி A1 இருக்கையில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் லதா என்றும் தான் கடந்த 05.08.2016 முதல் மேற்படி அலுவலகத்தில் A1 உதவியாளராக பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் தனது சாணி கலர் கைப்பையில் இருந்து ரூ.490/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க தனது சொந்தப் பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலுவலக அறையில் A2 இருக்கையின் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் புவனேஸ்வரி என்றும் தான் அலுவலக உதவியாளராக கடந்த 7 வருடமாக மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவர் அமர்ந்திருந்த மேஜை அறையில் அவரிடம் பணத்தைப் பற்றி விசாரிக்க அவர் தன்னிடமிருந்த கருப்பு நிற கைப்பையயின் உள்ளறையில் இருந்து ரூ.2,000/- நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை எண்ணிப்பார்த்த போது ரூ.12,000/- இருந்தது. மேற்படி பணத்தைப் பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததால் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது கைப்பையின் முன்னறையில் ரூ.500/-, ரூ.100/- ஆகிய நோட்டுகள் இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.3,110/- இருந்தது. மேற்படி பணத்தைப் பற்றி விசாரிக்க அது

அவரது சொந்தப்பணம் என்று கூறியதால் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அலுவலக அறையில் நுழைவாயில் அருகே அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் சந்தோஷ்குமார் என்றும் தான் 2016 முதல் மாவட்ட தீயணைப்பு அலுவலரின் வாகன ஓட்டுனராக பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரிடம் பணம் பற்றி விசாரிக்க ரூ.2,460/- எடுத்து ஆஜர் செய்தார். பணம் பற்றி அவரிடம் விசாரிக்க தனது சொந்தப் பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு எதிரே அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் மணிகண்டன் என்றும் தான் தரம் உயர்த்தப்பட்ட முன்னனி தீயணைப்பாளராக பல்லடம் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தான் தனது நிலையத்தின் சம்பளப்பட்டியல் தயார் செய்வதற்காக வந்திருப்பதாகவும் கூறினார். பணம் பற்றி அவரிடம் விசாரிக்க ரூ.4,080/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தைப் பற்றி விசாரிக்க அது தனது சொந்தப் பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் அருகே அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் தாமோதரசாமி என்றும் அவர் தான் திருப்பூர் வடக்கு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தில் தீயணைப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் தான் தனது நிலையத்தின் சம்பளப்பட்டியல் தயார் செய்வதற்காக வந்திருப்பதாகவும் கூறினார். பணம் பற்றி அவரிடம் விசாரிக்க ரூ.3,430/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தைப் பற்றி விசாரிக்க அது தனது சொந்தப் பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் அருகே அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் லிங்கஜோதிநாதன் என்றும் அவர் தான் திருப்பூர் வடக்கு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தில் தீயணைப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் தான் தனது நிலையத்தில் இருந்து செய்தித்தாளை மாவட்ட தீயணைப்பு அலுவலகத்தினர் எடுத்துச் சென்றதை திரும்ப பெறுவதற்காக வந்திருப்பதாகவும் கூறினார். பணம் பற்றி அவரிடம் விசாரிக்க ரூ.3,220/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தைப் பற்றி விசாரிக்க அது அவர் தனது சொந்தப்பணம் என்று கூறியதால் திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது. அவர் அருகே அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் கொடிசேகர் என்றும் அவர் தான் காங்கயம் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தில் தீயணைப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் தான் தனது நிலையத்தின் சம்பளப்பட்டியல் தயார் செய்வதற்காக வந்திருப்பதாகவும்

கூறினார். பணம் பற்றி அவரிடம் விசாரிக்க ரூ.20/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தைப் பற்றி விசாரிக்க அது அவர் சொந்தப்பணம் என்று கூறியதால் திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலக அறை, மாவட்ட தீயணைப்பு அலுவலர் அறை, உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் அறை, நிலைய தீயணைப்பு அலுவலர் தீ தடுப்பு குழு அலுவலகம் மற்றும் பதிவறை ஆகியவற்றை சோதனை செய்த போது வேறு பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. திருப்பூர் மாவட்ட தீயணைப்பாளர் அலுவலர் அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் தணிக்கையின் போது கணக்கில் வராத மொத்தம் ரூ.47,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் தீ தடையின்மைச் சான்று, தீ உரிமம் வழங்குதல் மற்றும் தீ உரிமம் புதுப்பித்தல் தொடர்பான ஆவணங்களைப் பற்றிக் கேட்க தீ தடையின்மைச் சான்று மற்றும் தீ உரிமம் பதிவேடு -2017-III என்ற பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்ததை பார்வையிட்டு பக்க எண். 1 முதல் 19 வரை பதிவு செய்யப்பட்டிருந்ததை ஒளி நகல் எடுத்து மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது. வருகைப் பதிவேடை பற்றி விசாரிக்க திருப்பூர் மாவட்ட அலுவலக தீ தடுப்பு குழு வருகைப் பதிவேடு-2018, திருப்பூர் மாவட்ட அலுவலர் அலுவலக வருகைப் பதிவேடு-2018, திருப்பூர் மாவட்ட அலுவலர் அலுவலக தொடர்குறிப்பு பதிவேடு-2018 ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பதிவேடுகளின் ஒளிநகல் எடுத்து மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அனைத்து ஆவணங்களின் அசலை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திருப்பூர் மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலக பணப்பதிவேடு பற்றி மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் விசாரிக்க பணப்பதிவேட்டையும், பணப்பெட்டியையும் பராமரிப்பது A1 உதவியாளர் திருமதி.லதா என்று கூறினார். மேற்படி உதவியாளர் திருமதி.லதா என்பவரிடம் பணப்பதிவேடு பற்றி விசாரிக்க அவர் தான் கைதவறுதலாக வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டதாக கூறினார். மேலும் திருப்பூர் மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலக நிலையான முன்பணப் பதிவேடு பற்றி விசாரிக்க ஆஜர் செய்த ஆவணத்தை பார்த்த போது மேற்படி பதிவேட்டில் கடைசி பக்கம் எண்.102, 27.12.2017-ம் தேதி வரை எழுதப்பட்டிருந்தது. அதில் செலவு செய்யப்பட்ட பணம் ரூ.500/- க்கு கணக்கு சரியாக இருந்தது. மேற்படி பதிவேட்டின் முன் பக்கம் மற்றும் பக்க எண்.102-ன் ஒளிநகல் எடுத்து மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் சான்றொப்பம் பெறப்பட்டு

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அனைத்து ஆவணங்களின் அசலை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பணப்பெட்டியை சோதனை செய்த போது அதில் எவ்வித பணமும் D.D-ம் இல்லை என உறுதி செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அலுவலக ஆவணங்களுக்கும், அரசு சொத்துக்களுக்கும் எவ்வித சேதம் இன்றி அலுவலர்களை கண்ணியத்தோடு நடத்தப்பட்டது. இந்த திடீர் தணிக்கை சம்பந்தமான நடவடிக்கைகள் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கணினியில் இன்று (12.01.2018) இரவு 19.10 மணி முதல் 23.00 மணி வரை தட்டச்சு செய்து முடிக்கப்பட்டது.ஒப்பம்...P.N.பிரபாகரன், ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோவை மாவட்டம், N.ரவிச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர், R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர்,G.வெங்கடேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர், L.சுப்பிரமணி, மாவட்ட அலுவலர், தீயணைப்பு மீட்பு பணிகள், திருப்பூர் மாவட்டம், K.சக்திவேல், நிலைய தீயணைப்பு அலுவலர், திருப்பூர் வடக்கு, K.புவனேஸ்வரி, அலுவலக உதவியாளர், மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகம், திருப்பூர். Sir, Received the complaint and registered a case in Tiruppur V&AC Cr.No.1/2018/AC/TPR U/s 102 Cr.P.C, 13(2) r/w 13(1)(d) of P.C Act 1988 on 13.01.2018 at 0100 Hours. ஒப்பம்---N. ரவிச்சந்திரன், 13.01.2018. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், நடவடிக்கைகள் ஆகியவைகள் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றம், திருப்பூர் அவர்களுக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(N.ரவிச்சந்திரன்),
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருப்பூர். 13.1.18